**தலைப்பு 258 - மாவட்ட செயலகம், கண்டி**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பாடுகள்

(அ) மாவட்ட நிர்வாகம்

(ஆ) சட்டவாக்க நடவடிக்கைகள்

(இ) உள்ளகக் கட்டுப்பாட்டினை பலப்படுத்தல்

(ஈ) மதசார் மற்றும் ஒழுக்க அபிவிருத்தி

(உ) ஊழியர் நலன்புரி

(ஊ) ஒருங்கிணைத்தலும் நட்புரீதியான நிர்வாகமும்

(எ) அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் கம நெகும

(ஏ) அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூகப் பங்களிப்பு

(ஐ) ஊடக ஒருங்கிணைப்பு

(ஒ) நிர்வாகக் கொள்கை அபிவிருத்தி மற்றும் பயிற்சி

(ஓ) தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு

## 1.2 மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்கள்

(அ) கங்கவட்ட கோரளை

(ஆ) பாத்தஹேவாஹெட்ட

(இ) தெல்தோட்டை

(ஈ) உடபலாத்த

(உ) உடதும்பர

(ஊ) பாத்ததும்பர

(எ) பன்வில

(ஏ) ஹத்தரலியத்த

(ஐ) பூஜாபிட்டிய

(ஒ) தும்பனே

(ஓ) மினிப்பே

(ஔ) குண்டசாலை

(க) தொழுவ

(கா) கங்க இஹல கோரளை

(கி) யட்டிநுவர

(கீ) உடுநுவர

(கு) ஹாரிஸ்பத்துவ

(கூ) அகுரணை

(கெ) மெததும்பர

(கே) பஸ்பாகே கோரளை

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

கண்டி மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 26 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கண்டி மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும், வருமானக் கணக்கும், இணைக்கக் கூற்றும் இங்கே (அ) தொடக்கம் (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.6 தொடக்கம் 1.14 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) மொத்த நிதி ஏற்பாடும் செலவினங்களும்**

மாவட்ட செயலகத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,044,044,400 தொகையாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 1,021,638,358 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய ஏற்பாட்டில் ரூபா 22,406,042 தொகை அதாவது 2 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 922,394,400 | 922,392,630 | 1,770 | 00 |
| மூலதனம் | 121,650,000 | 99,245,728 | 22,404,272 | 18 |
| மொத்தம் | 1,044,044,400 | 1,021,638,358 | 22,406,042 | 02 |

**(ii) பாதீட்டு முரண்**

3 செலவின விடயங்களுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு திருத்தப்படாமையின் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 8 சதவீதம் தொடக்கம் 26 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றால் வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளின் பயன்பாடு**

வெவ்வேறு செயற்பாடுகளுக்காக 27 அமைச்சுக்களாலும் 18 திணைக்களங்களாலும் ரூபா 4,477,955,869 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிஏற்பாட்டில் முறையே ரூபா 2,259,398,406 தொகையும் ரூபா 1,885,041,308 தொகையுமாக ரூபா 4,144,439,714 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் முறையே ரூபா 294,707,096 தொகையும் ரூபா 38,809,059 தொகையுமாக ரூபா 333,516,155 கூட்டுத்தொகை சேமிக்கப்பட்டிருந்தன. அந்த சேமிப்பு கிடைக்கப்பெற்ற நிதிஏற்பாட்டில் முறையே 11.54 சதவீதமும் 2.02 சதவீதமுமாக இருந்தன.

**(இ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகளும் உள்ளவாறான பெறுமதிகளும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறா னவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளவாறா னவை | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறா னவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 25801 | 65,000,000 | 60,972,925 | 49,000,000 | 60,045,982 | 244,000,000 | 190,320,942 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கண்டி மாவட்ட செயலகத்தின் அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் 2013 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம், மரணித்த மற்றும் ஓய்வுபெற்ற 12 உத்தியோகத்தர்களிடமிருந்து 08 வருட காலமாக நிலுவையாக இருந்த ரூபா 730,095 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அலுவலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

கண்டி மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான வைப்புக் கணக்கின் மீதி ரூபா 253,099,653 ஆகும். அந்த மீதியில் 2 வருடங்களை விஞ்சிய ரூபா 30,700,654 கூட்டுத்தொகையான 73 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.6.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 1.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை பிரகாரம் 2013 இன் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 வரையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ள சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனை களின் போது அவதானிக்கப்பட்டன.

| சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாமல் அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்த காலப்பகுதி |
|---|---|---|
| இயந்திர சூத்திரம் (மரக்கறி பாதுகாக்கும் இயந்திரம்) | 06 | 2008 நவம்பர் 21 ஆந் திகதி முதல் |
| அரிசி அரைக்கும் இயந்திரம் | 04 | 02 வருடங்கள் |
| அலுவலக தளபாடப் பொருட்கள் | 40 | 01 வருடம் |

### (ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

மாவட்ட செயலகத்தினால் சில சொத்துக்கள் முறையற்ற வகையில் வெளித்தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சொத்துக்களின் வகை | சொத்துக்களின் எண்ணிக்கை | சொத்துக்கள் வழங்கப்பட்ட நிறுவனம் | காலப்பகுதி |
|---|---|---|---|
| கண்டி மாவட்ட செயலகத்திற்குரிய மேலதிக மாவட்ட செயலாளருக்கான அரசாங்க விடுதி | 01 | இலங்கை இராணுவ பொலிஸ் சேவை படையணி | 2003 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் 06 மாத காலத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த விடுதி 2014 ஆகஸ்ட் வரையிலும் மீளக்கையளிக்கப்பட்டிருக்கவில்லை. |

**(இ) தீர்த்து வைக்கப்படாத பொறுப்புக்கள்**

மாவட்ட செலயகத்தினால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு குறைவான ரூபா 2,228,215 தொகையான தீர்த்து வைக்கப்படாத பொறுப்புக்கள் காணப்படட்து.

## 1.8 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமைகள்** |
|---|---|---|
| | **ரூபா** | |
| (அ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| (i) 2008 யூலை 26 ஆம் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | 96,216 | மினிப்பே பிரதேச செயலாளரினால் மாதாந்த எரிபொருள் படிக்கு மேலதிகமாக முறையான அங்கீகாரமின்றி மேலதிக எரிபொருள் படியாக ரூபா 96,216 தொகை 2013 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | கங்கஇஹல கோரளை பிரதேச செயலகத்தில் 2013 திசெம்பர் 03 ஆந் திகதி வரையில் வரவுகளைப் பதிவதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 18/2001 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | கண்டி மாவட்டத்தில் 09 பிரதேச செயலகங்களுக்கு நியமிக்கப்பட்டு சேவையாற்றுகின்ற 111 உத்தியோகத்தர்களுக்காக சுற்றுநிருபத்தில் குறிப்பிட்ட படி இடமாற்றம் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| 2009 செப்தெம்பர் 18 ஆம் திகதிய பீஎப்/477 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | பூஜாப்பிட்டி பிரதேச செயலகத்தில் காசாளரின் பொறுப்பில் காணப்பட்ட பாதுகாப்பகம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் அல்லது காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 1.9 செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில் பலவீனம்

செயற்திட்டத்தை ஆரம்பிக்காமல் கைவிடுதல் மற்றும் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதிலுள்ள தாமதங்கள் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காமல் கைவிடுதல்

மாவட்ட செயலகத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள செயற்திட்டங்கள் ஆரம்பிக்காமல் கைவிடப்பட்டிருந்தன.

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் சுருக்கமாக |
|---|---|---|---|---|
| | ----------------- | ----------------- | ----------------- | ----------------------------------------------------------- |
| | | ரூபா | | |
| (i) | உடபலாத்த பிரதேச செயலகம் மற்றும் கங்கஇஹல கோரளை பிரதேச செயலகம்<br>------------------------ | | | |
| | வர்ண மீன் உற்பத்தியும் உணவிற்கான மீன் உற்பத்தியும் | 306,000<br>164,500<br>-----------<br>470,500<br>===== | 2011/2012 | மீன்பிடி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டு நலனாளிகளுக்கு கடன் பணம் வழங்கப்பட்டதன் பின்னர் திட்டத்தின் பிரகாரம் பின்தொடர் நடவடிக்கைகள் பிரதேச செயலகத்தினாலும் மாவட்ட நீர்வாழ் உற்பத்தி செயற்திட்ட அலுவலகத்தினாலும் ஒன்றிணைந்து அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>இதனால் நலனாளிகள் வர்ண மீன் உற்பத்தி செயற்திட்டத்தில் காணப்படுகின்ற ஆர்வம் குறைவடைந்தமையினால் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | யட்டிநுவர பிரதேச செயலகம்<br>-------------------------- | | | |
| - | வஹரக்கொட பெரிய நீர் வாய்க்கால் வழி | 50,000 | 2013.12.18 | நீர்வழங்கல் சபையிலிருந்து மதிப்பீட்டுப் பணம் கிடைக்காமை |
| - | பேலவ இஹல மெத தாய், சேய் சுகாதார நிலைய அபிவிருத்தி | 150,000 | 2013.11.20 | பணம் போதியளவாக இன்மை |

| | | | | |
|---|---|---|---|---|
| - | தன்துரே ஓமென்டல் ஜனபத வீதி | 150,000 | 2013.08.07 | மண் வேலைக்கான திட்டத்தை திருத்தாமை |
| (iii) | உடுநுவர பிரதேச செயலகம்<br>-------------------------- | | | |
| | வட்டதெனிய மயான வீதியை அபிவிருத்தி செய்தல் | 48,500 | 2003.12.13 | உடன்படிக்கை செய்த நிறுவனம் 2013.12.31 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஆர்வமில்லாமை. |
| (iv) | குண்டசாலை பிரதேச செயலகம்<br>-------------------------- | | | |
| - | பலகொல்ல கிழக்கு அபித விளையாட்டரங்கிற்கு மின்சாரக் கம்பிகளை இழுத்தல், மின்சாரம் மற்றும் நீரை பெற்றுக்கொள்ளல் | 65,000 | 2013.12.25 | செயற்திட்ட உத்தேசத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டு நிதி கிடைப்பதில் தாமதம் |
| - | குமுது மாவத்தை உப வீதிக்கு கொங்கிரீட் இடல் | 198,000 | 2013 | தனியார் காணி ஊடாக அமுல்படுத்த வேண்டியிருந்தமை |
| - | புதுகேஹின்ன தர்மாராம உபாசிகாராமயின் படிக்கட்டுக்களின் நிர்மாணம் | 495,000 | 2013 | செயற்திட்ட வளவிற்குள் பொருட்களைக் கொண்டுசெல்வதில் வசதியீனம் காணப்பட்டமையால் தொடர்ச்சியாகச் செய்வதற்கு அங்கீகாரம் கோரப்பட்டிருந்தும் அங்கீகாரம் கிடைக்கப்பெறாமை |
| (v) | தெல்தோட்டை பிரதேச செயலகம்<br>-------------------------- | | | |
| - | நவநெலிய முதல் கொட்டகேபிட்டிய குறுகல்ஓய வரை நிர்மாணிக்கப்பட்ட வயல் நடுவிலுள்ள நடைபாதைப் | 72,750 | 2013.07.16 | செயற்திட்டத்தை திருத்துவதற்கு முடியாமை |

| | | | | |
|---|---|---|---|---|
| | பாலத்தை பழுதுபார்த்தல் | | | |
| - | பத்தம்பள்ளி கந்ததென்ன வத்தை நீர் உத்தேசத் திட்டத்தை அபிவிருத்தி செய்தல் | 485,000 | 2013.08.15 | செயற்திட்டத்தை திருத்துவதற்கு முடியாமை |

## (ஆ) செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

மாவட்ட செயலகத்தால் கீழே காட்டப்பட்டுள்ள செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் அவதானிக்கப்பட்டன.

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | பூர்த்திசெய்யப்பட வேண்டிய திகதி | 2013 திசெம்பர் 31 ஆந் திகதிவரையில் செலவினம் | கைவிடப்பட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | ரூபா | |
| (i) | குண்டசாலை பிரதேச செயலகம் | | | | | |
| | தெலிவலதென்ன மெதகம்மெத்த பகுதியில் தல்மெடியாவெல ஊடாக பிஹிமியகஹ நாற்சந்தி முதல் கம்சபா வீதி அபிவிருத்தி | 297,000 | 2013.11.25 | 2013.12.25 | 17,246 | செயற்திட்ட வளவிற்குள் பொருட்களைக் கொண்டுசெல்வதில் வசதியீனம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ii) | உடுதும்பற பிரதேச செயலகம் ------------------------ | | | | | |
| - | பம்பரபெத்த கிழக்கு கம்மெத வீதியின் எஞ்சிய பகுதியை புனரமைத்தல் | 1,200,246 | 2012.08.30 | 2013.06.28 | 974,400 | கடும் மழை |
| - | பம்பரபெத்த மேற்கு கம்மெத வீதியின் எஞ்சிய பகுதியை புனரமைத்தல் | 1,201,782 | 2012.08.30 | 2013.06.27 | 974,000 | -மேற்படி- |
| - | மடுகல்ல வடக்கு நீர் உத்தேசத்திட்டத்தை அபிவிருத்தி செய்தல் | 1,015,483 | 2012.08.30 | 2013.07.12 | 974,000 | -மேற்படி- |
| - | கைகாவல நீர் உத்தேசத்திட்டத்தை அபிவிருத்தி செய்தல் | 1,317,987 | 2012.08.30 | 2013.08.06 | 974,000 | -மேற்படி- |
| - | நுகேதென்ன கல்பொக்க வீதியை புனரமைத்தல் | 1,198,942 | 2012.11.30 | 2013.05.29 | 974,000 | -மேற்படி- |
| - | தேவின்னேகம புறச் செயற்பாட்டுக் கட்டிட நிர்மாணம் | 986,805 | 2012.08.27 | 2013.11.07 | 971,344 | -மேற்படி- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| - | 10775 மரமுந்திரிகை கன்றுகள் கொள்வனவு செய்து 2013 ஆம் ஆண்டின் போது நட்டுதல் | 2,237,500 | 2013.12.26 முதல் 2013.12.30 வரை | 2013.12.31 | 1,102,000 | 5265 மரமுந்திரிகை கன்றுகள் கொள்வனவு செய்யப்படாமை |
| (iii) | பஸ்பாகே கோரளை பிரதேச செயலகம் ------------------------ | | | | | |
| | உத்துபில முதல் மஹகும்புர புகையிரதப் பாதை வரையான வீதியை நிர்மாணித்தல் | 500,000 | 2013.11.06 | 2013.12.31 | 500,000 | குறிப்பிட்ட நியமங்களுக்கு இணங்க வேலை பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக கொடுப்பனவு செய்யப்படாமை |

**(இ) நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் அடையப்பெறாத செயற்திட்டங்கள்**

---

தொழுவ பிரதேச செயலகத்தினால் பன்விலதென்ன கஹவத்த கோயிலின் அறநெறிப் பாடசாலையை அபிவிருத்தி செய்யும் வேலைக்காக ரூபா 150,000 தொகையான நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 145,354 செலவில் ‘‘டைல்’’ பெறப்பட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 12 ஆந் திகதி வரையிலும் ‘‘டைல்’’ இனைப் பதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் இச்செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டமைக்கான வேலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

## 1.10 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

உடுதும்பர பிரதேச செயலகத்திற்குரிய மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகம் நடாத்திச் செல்லப்பட்ட கட்டிடத்தின் கூரை, கதவு, யன்னல் மற்றும் மலசலகூட முறைமைகளை திருத்துவதற்காக ரூபா 849,797 தொகையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. 2013 பெப்ரவரி 14 ஆந் திகதி அந்த மதிப்பீடு மாவட்ட செயலகத்திற்கு அனுப்பப்பட்ட போதும், அந்த திருத்தங்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக கட்டிடம் நாளுக்கு நாள் உடைந்து விழும் நிலையில் உள்ளது.

## 1.11 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்ற தன்மையுடையதாக இருந்தன. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

### (அ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டியிலிருந்து விலகியமை

2013 மே 22 ஆந் திகதிய கொள்வனவுத் தீர்மான இலக்கம் 201 இன் மூலம் ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த இரண்டு நிறுவனங்களிலிருந்து ரூபா 406,050 படியான 2 கட்டளைகளின் மூலம் 90 டோனர் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவுக் குழுவின் தீர்மானமான கூறுவிலையின் அடிப்படையில் 2013 திசெம்பர் 21 ஆந் திகதி கொள்வனவுக் குழுவின் அங்கீகாரமின்றி மேலும் 58 டோனர் அந்த விலைக்கு வேறு நிறுவனமொன்றிடமிருந்து ரூபா 359,698 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

### (ஆ) அதிகாரபலமின்றிய கொடுக்கல்வாங்கல்கள்

கங்கஇஹல கோரளை பிரதேச செயலகத்தினால் மாகாண சபையின் ஊழியரொருவருக்கு 2013 ஆம் ஆண்டின் போது மத்திய அரசின் தலைப்பிலிருந்து சம்பளமாக ரூபா 263,784 தொகையும் இடர்கடனாக ரூபா 53,820 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

## 1.12 நட்டங்களும் சேதங்களும்

-----------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) உடுதும்பர பிரதேச செயலகத்தில் திவி நெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மிருக வைத்திய உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட அவதானிப்புக்களைக் கவனத்தில் கொள்ளாமல் 2013 ஆம் ஆண்டில் ஒரு மாத வயதுடைய பேட்டுக் குஞ்சுகள் நலனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. 2014 மார்ச் 30 ஆந் திகதி வரையில் 1,002 குஞ்சுகள் மரணித்தமையின் காரணமாக ரூபா 345,150 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் போது மிருக வைத்திய உத்தியோகத்தரின் சிபார்சின்றி ரூபா 362,220 தொகை செலவில் ஒரு மாத வயதுடைய பேட்டுக் குஞ்சுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) மினிப்பே பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் திவி நெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் கடற்தொழிலுக்காக 6 நலனளிகளுக்கு ரூபா 256,500 தொகையான கடனும் மானியமும் வழங்கப்பட்டிருந்தன. அதில் 06 நலனாளிகளுக்காக வழங்கப்பட்ட கடன் பணத்திலிருந்து 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ஆறு நலனாளிகளிடமிருந்து ரூபா 78,000 தொகையை அறவிடுவதற்கு மாவட்ட செயலகம் தவறியிருந்தது.

(இ) மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான வாகனம் 2013 யூலை 18 ஆந் திகதி விபத்திற்குள்ளாகியமையினால் 2013 செப்தெம்பர் 03 ஆந் திகதி ரூபா 9,284 தொகை செலவில் பழுதுபார்க்கப்பட்டிருந்தது. அந்த நட்ட இழப்பு தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.13 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---------------------------------------------------------------

சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் நலன் அமைச்சுச் செயலாளரின் 2011 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் முன்பள்ளிப் பிள்ளைகளுக்காக உடன் பால் ஒரு கோப்பை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமுல்படுத்த வேண்டிய போதிலும் கண்டி மாவட்ட செயலகத்திற்குரிய 09 பிரதேச செயலகங்களில் பதிவுசெய்யப்பட்ட 477 முன்பள்ளிப் பாடசாலைகளில் 148 முன்பள்ளிப் பாடசாலைகளில் இந்த நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.14 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 82 | 73 | 09 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 109 | 69 | 40 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1,702 | 1,308 | 394 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 218 | 183 | 35 | - |
| (v) | ஏனையவை(அமைய / தற்காலிக/ ஒப்பந்த அடிப்படையில்) | 03 | 9 | - | 06 |
| | மொத்தம் | 2,114 | 1,642 | 478 | 06 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

8 பிரதேச செயலகங்களில் சில வருடகாலமாக நிலவிவரும் 322 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாவட்ட செயலகம் தவறியிருந்தது.

### (ஆ) கடமை கையளிக்கப்படாமை

2013 யூன் 11 ஆந் திகதிய HAF-A/6/GT/Duty List ஆம் இலக்க பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் சுற்றுநிருபத்தின் படி, அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகங்களில் நியமிக்கப்பட்ட பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு கடமை கையளிக்கப்பட்டு சேவை பெறப்பட வேண்டிய போதிலும் 14 பிரதேச செயலகங்களுக்கு நியமிக்கப்பட்ட பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு குறிப்பிட்ட கடமை கையளிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அந்த உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 8,991,987 தொகையான சம்பளம் மற்றும் படிகள் மாவட்ட செயலகத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு பங்களித்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை.